இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் என் அன்பையும், ஆசீரையும் வழங்கி வாழ்த்துகிறேன்!

இந்த மாத இதழ் புனித வெள்ளி, உயிர்ப்பு பெருவிழா சிறப்பிதழாக வெளிவருகிறது. புனித வெள்ளி கிறிஸ்தவர்களின் வாழ்வில் மிக முக்கியம் வாய்ந்த நாள். நம்முடைய பாவங்களுக்காக ஆண்டவர் இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னையே பலியாக தியாகம் செய்த நாள். மனுக் குலத்தின் மேல் இறைவன் கொண்டுள்ள அளவற்ற அன்பின் அடையாளமே சிலுவைப் பலியாகும்.

நற்செய்தியானது கிறிஸ்துவின் உயிர்ப்பை விளக்குகிறது என்பதைவிட கிறிஸ்துவின் உயிர்ப்புதான் நற்செய்திக்கே விளக்கம் அளிக்கிறது. ஏனெனில் புனித பவுலடியார் உணர்த்தியது போல் கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் நற்செய்தியும், நம் நம்பிக்கையும் பயனற்றது. (1கொரி. 15:14) திருத்தூதர்களின் போதனைகளுக்கு மையக் கருவாக விளங்கியது கிறிஸ்துவின் உயிர்ப்பாகும். கிறிஸ்துவின் உயிர்ப்பு நமது வாழ்வுக்கு புதிய நம்பிக்கையையும், வழியையும் தந்து அருள் பாலிக்கிறது.

கிறிஸ்துவின் உயிர்ப்பின் மூலம் புதியதோர் உலகம் படைக்க அழைக்கப்படுகிறோம். ஒளியின் மக்களாக வாழ்ந்து ஒளியை பகிர்ந்து வாழவேண்டும். பங்கேற்பு திருச்சபையின் உறுப்பினர்களாய் உறவில் பகிர்வோம். உயிர்த்த இயேசுவின் அன்பும் சமாதானமும் உங்கள் உள்ளங்களிலும் இல்லங்களிலும் கருவாகட்டும். இணைந்து ஜெபிப்போம், இணைந்து பணி செய்து உயிர்ப்பின் மகிழ்ச்சியை உலகுக்கு எடுத்துரைக்கும் அன்பு சீடர்களாய் வாழ்வோம்.

திருக்கல்யாண அன்னையின் ஆலயம் வந்து அன்னையை தரிசித்து வேண்டிய வரங்களை கேட்டுப் பெறுவோம். அன்னையின் புகழை அகிலமெல்லாம் பரப்புவோம்.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!

Happy Easter

அன்புடன்
**பங்குத் தந்தை**
பொத்தக்காலன்விளை.

# உலகத் திருச்சபை செய்திகள்



**துன்பங்களையும் தாங்கி உறுதியுடன் நிற்பதே பெருமை** – திருத்தந்தை.

விசுவாசத்தில் உறுதியாக நிற்கும் இறைமக்கள், தங்கள் தினசரி வாழ்வின் சோதனைகளையும், துன்பங்களையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதே அவர்கள் முன்னோக்கி நடந்துசெல்ல உதவுகின்றது. பொறுமை என்பதுஒரு பிரச்சனையிலிருந்து ஒதுங்கியிருப்பது அல்ல. மாறாக, துன்பங் களைத் தாங்கி, உறுதியுடன் நிற்பதைக் குறிக்கின்றது. குழந்தைகள் போல் வானிலிருந்து உடனடி அடையாளங்கள் வேண்டுபவர்களாக இல்லாமல், நம்மோடு பொறுமையுடன் நடைபோடும் இறைவனைப் போல் செயல்பட தன் மறையுரையில் அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் எண்ணற்ற சித்திரவதைகளை அனுபவித் தாலும், அவர்கள் இறைவனின் வாக்குறுதிகளில் நம்பிக்கை வைத்து பொறுமையுடன் செயல்பட்டனர். இன்னும் எத்தனையோ குடும்பங்கள் மாற்றுத் திறனாளி களான குழந்தைகளுடன் இறைநம்பிக்கை யோடு பொறுமையுடன் செயல்பட்டு வருவதை குறித்து தன் பாராட்டுக்களையும் வெளியிட்டார் திருத்தந்தை.

**தனது வாழ்க்கைத் துணைவர் கடவுளின் கொடை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும்.**

– திருத்தந்தை.

அன்பு உணர்ச்சிப்பூர்வமாக மட்டும் இருந்தால், அதன்மீது உறுதியான எதையும் கட்ட முடியாது. மாறாக அன்பு என்பது ஓர் உண்மையான உறவு. அது தனியாக அல்ல, நாம் ஒன்றிணைந்து ஒரு வீட்டைக் கட்டுவது போன்றது என்று கூறினார் திருத்தந்தை. என்றென்றும் சேர்ந்து வாழ்வதில் பயம், திருமண வாழ்வுமுறை, திருமணக் கொண்டாட்ட முறை ஆகிய மூன்று தலைப்புகளில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த திருத்தந்தை, சேர்ந்து வாழ்வது ஒரு கலை, அது பொறுமையான, அழகான பெறும் வியப்பு கலந்த பயணம். திருமணத்தின் தரம் முக்கியமானது. தயவுசெய்து மன்னியுங்கள், நன்றி ஆகிய வார்த்தைகளை திருமணம் செய்து கொள்ளப்போகும் தம்பதியர் கற்றுக் கொள்ளவேண்டும் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள்.

**புறணி பேசுவது மனிதரைக் கொல்லும் வலிமையுடையது.**

– திருத்தந்தை

மற்றவரைக்குறித்து புறணி பேசுவதையும், தவறான கருத்துக் களைப் பரப்புவதையும் ஒவ்வொரு வரும் நிறுத்த வேண்டும். ஏனெனில் இத்தகைய நஞ்சு கலந்த வார்த்தை கள் மனிதரைக் கொல்லும் சக்தி படைத்தவை என்று திருத்தந்தை அவர்கள் கூறினார்.

மேலும் தன் சகோதர சகோதரிகளோடு சமாதானமாகப் போக முடியாதவர்கள் இறைவனோடு கொண்டிருக்கும் உறவிலும் உண்மையுள்ளவராக இருக்கமுடியாது என்பதையும் திருத்தந்தை தன் மூவேளை செப உரையில் வலியுறுத்தினார்.

நன்றி: **வத்திக்கான் செய்திகள்**

# மறைமாவட்ட




# செய்திகள்



- **1,2-3-14** ஆகிய இருநாட்களும் மேதகு ஆயர் அவர்கள் தூத்துக்குடி திரு இருதயங்களின் பேராலய பங்கு மக்களைச் சந்தித்து உரையாடினார்கள்.
- **3-3-14** தூத்துக்குடி ஹோம் சயின்ஸ் கல்லூரி ஆண்டு விழா மேதகு ஆயர் தலைமையில் நடைபெற்றது.
- **5-3-14** திருநீற்றுப்புதன் திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திரு இருதயங்களின் பேராலயத்தில் வைத்துநடைபெற்றது.
- **7,8,9-3-14** ஆகிய மூன்று நாட்களும் அந்தோனியார்புரம் பங்கு மக்களை மேதகு ஆயர் அவர்கள் சந்தித்து உரையாடினார்கள்.
- **11-3-14** அன்று குறுக்குச்சாலை, தூத்துக்குடி, மணப்பாடு, வடக்கன்குளம் மறைவட்ட குருக்களுக்கும்12-3-14 அன்று சாத்தான்குளம் மறைவட்ட குருக்களுக்கும் மாதாந்திர தியானம் நடைபெற்றது.
- **13-3-14** அன்று மாலை மறைமாவட்ட நிதிக்குழு கூட்டம், மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- **14-3-14** அன்று காலை வீரபாண்டியன்பட்டணத்தில் புனித ஜோசப் அருள் சகோதரிகளுக்காக மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- **15,16-3-14** ஆகிய இருநாட்களும் மேதகு ஆயர் அவர்கள் கால்டுவெல் காலனி பங்கு மக்களை சந்தித்து உரையாடினார்கள்.
- **18-3-14** அன்று காலை மறைமாவட்டக் கல்விக்குழு கூட்டமும், அன்று மாலை மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூட்டமும் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- **19-3-14** அன்று மாலை முதியோர் இல்லத்தில் வைத்து மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் திருப்பலி நடைபெற்றது.
- 22-3-14 அன்று காலை கிறிஸ்தவர் வாழ்வுரிமை இயக்க கூட்டம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- 23-3-14 அன்று சொக்கன்குடியிருப்பு பங்கு மணல்மாதா திருத்தலத்தில் வைத்து மறைமாவட்ட திருப்பயண விழா மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.
- **29,30-3-14** ஆகிய இரு நாட்களும் மேதகு ஆயர் அவர்கள் திரேஸ்புரம் பங்கு மக்களை சந்தித்து உரையாடினார்கள்.

நன்றி- **மறைமாவட்ட செய்திகள்**

பிப்-1, 2014 **CBCI** எனும் இந்திய கத்தோலிக்க ஆயர் பேரவையின் புதிய தலைவராக சீரோ மலங்கரா வழிபாட்டு முறையின் தலைவர் கர்தினால் சிலியோன் கிளீமிஸ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்த நான்கு ஆண்டுகளாக இந்திய ஆயர் பேரவையின் தலைவராக பம்பாய் பேராயர் கர்தினால் ஆஸ்வால்ட் கிராசியஸ் அவர்கள் செயல்பட்டு வந்தார்.



# பங்குச் செய்திகள்

**1.3.2014** அன்று முதல் சனி வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**2. 3.2014** அன்று காலை பங்குப் பேரவை கூட்டம் நடைபெற்றது. அதில் ஆலய கூரை அமைக்கும் பணிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

**3.3.2014** அன்று +2 தேர்வுகள் ஆரம்பமாயின. நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளியிலிருந்து 23 மாணவர்களும் 35 மாணவியர்களும் தேர்வு எழுதினார்கள். அவர்களுக்காக சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது.

**4.3.2014** அன்று நமது ஊர் புனித அந்தோனியார் கெபியில் மாலைத் திருப்பலி நடைபெற்றது.

**5.3.2014** அன்று திருநீற்றுபுதன் திருப்பலி பங்குத்தந்தை தலைமையில் நமது திருத்தலத்தில் சிறப்பாக நடைபெற்றது.

**7.3.2014** அன்று மாலை நமது கோயில் வளாகத்தில் சிலுவைப் பாதை வழிபாடுகள் நடைபெற்றன. சிலுவைப் பாதை வழிபாட்டினை மாதா சபையினர் சிறப்பித்தார்கள்.

**8.3.2014** அன்று மாலை திருக்கல்யாண அன்னையின் திருத்தலத்தில் சனிக்கிழமை மாலை நவநாள் திருப்பலி நடைபெற்றது.

**9.3.2014** அன்று காலை 11 மணிக்கு நமது ஆலய மண்டபத்தில் வைத்து பங்குத் தந்தை தலைமையில் நமது ஊர் பொது அசன சிறப்பு ஊர்க்கூட்டம் நடைபெற்றது. அன்று மாலை கள்ளிகுளத்தில் வைத்து நடைபெற்ற நமது முன்னாள் பங்குத் தந்தை அருள்திரு. நவமணி அடிகளார் நூற்றாண்டு ஆரம்பவிழா கொண்டாட்ட திருப்பலியில் கலந்து கொள்வதற்காக நமது ஊரிலிருந்து இரண்டு பேருந்துகளில் மக்கள் சென்றார்கள். திருப்பலிக்குப் பின் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் நமது ஊர் மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**12.3.2014** அன்று மாலை நமதுஊர் நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெற்றது.

**14.3.2014** அன்று மாலை நமது கோயில் வளாகத்தில் சிலுவைப்பாதை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டினை பாலர் சபை மாணவ மாணவியர்கள் சிறப்பித்தனர்

15.3.2014 அன்று மாலை திருக்கல்யாண அன்னையின் திருத்தலத்தில் சனிக்கிழமை மாலை நவநாள் திருப்பலி நடைபெற்றது.

16.3.2014 அன்று காலை 10 மணி அளவில் ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

21.3.2014 அன்று மாலை நமது கோயில் வளாகத்தில் சிலுவைப் பாதைவழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டினை இயேசுவின் திருஇருதய நண்பர் சபை மாணவ, மாணவியர் சிறப்பித்தார்கள்.

22.3.2014 அன்று காலை திருப்பலிக்குப் பின் பங்குத் தந்தை அவர்களால் நமது ஊர் பொது அசன உணவுப் பொருட்கள் ஆசீர்வதித்து மந்திரிக்கப்பட்டு அசனப் பணிகள் ஆரம்பமாயின. மாலை நற்கருணை ஆசீருக்குப்பின் பங்குத் தந்தை அவர்களால் ஜெபித்து, மந்திரிக்கப்பட்டு தவக்கால ஊர்ப்பொது அசனம் ஆரம்பமாகியது. பல்வேறு பகுதிகளிலிருந்து மக்கள் வருகை தந்துஉணவருந்தி இல்லங்களுக்கு வாங்கிச் சென்றார்கள். அசனம் மிகச்சிறப்பாக நல்ல முறையில் நடைபெற அனைத்து வகையிலும் உதவிய அனைத்து மக்களுக்கும் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

23.3.2014 அன்று நமது மறைமாவட்ட தவக்கால திருப்பயணம் மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மணல்மாதா திருத்தலத்தில் வைத்து நடைபெற்றது. இதில் நமது ஊரிலிருந்து இரண்டு பேருந்துகளில் சென்று மக்கள் கலந்து கொண்டார்கள்.

26.3.2014 அன்று பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் ஆரம்பமாயின. இதில் நமது ஊர் புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளியிலிருந்து 26 மாணவர்களும், 37 மாணவியர்களும் தேர்வு எழுதினார்கள். இவர்களுக்காக சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.

28.3.2014 அன்று மாலை நமது கோயில் வளாகத்தில் சிலுவைப்பாதை வழிபாடுகள் நடைபெற்றன. வழிபாட்டினை தொன்போஸ்கோ இளைஞர் சபையினர் சிறப்பித்தார்கள்.

29.3.2014 அன்று நமது ஊரிலிருந்து தவக்கால திருப்பயணமாக பாளையங்கோட்டை, கத்தீட்ரல், ராஜபாளையம், கோவில்பட்டி, உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி, தேனி, சிந்தலச்சேரி, அனுமந்தன் பட்டி, கம்பம், ராயப்பன்பட்டி (இரவு தங்குதல்)

30.3.2014 அன்று சுருளி அருவி, உத்தமபாளையம், தேனி, மதுரை, நெல்லை வழியாக ஊர் வந்துசேர்ந்தார்கள்.

– பங்குத்தந்தை

# ஆலய கூரை பணிக்குழு கூட்டம்

## 23.2.2014

ஆலய கூரை அமைக்கும் பணிக்குழு கூட்டம் பங்குத் தந்தை தலைமையில் ஆலய மண்டபத்தில் வைத்து காலை 11 மணி அளவில் துவங்கியது. அதில் கலந்துரையாடி கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1. ஆலய கூரை அமைக்க முடிவு செய்யப்பட்ட வரியை பங்குத்தந்தை அவர்கள் கோவிலில் அறிவிப்பு செய்து விரைவாக பிரிப்பதற்கு ஏற்பாடு செய்தல், மற்றும் தாராளமாக நன்கொடையும் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. வெளியூர் மக்களை தொடர்புகொண்டு ஏற்கனவே உள்ள பிரதிநிதிகள் மூலமாக வரி மற்றும் நன்கொடை பிரிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# பங்கு பேரவை கூட்டம்

## 2.3.2014

பொத்தக்காலன்விளை திருக்கல்யாண மாதா திருத்தல பங்கு பேரவை கூட்டம் பங்குத் தந்தையின் ஜெபத்துடன் ஆரம்பமானது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. திருக்கல்யாணமாதா ஆலய மண்டபத்தை பயன்படுத்தும் நபர்களுக்கு மண்டப வாடகை ஒரு நாளைக்கு ரூபாய் மூவாயிரம்(3000/-) என்று முடிவு செய்யப்பட்டது. கோவிலில் தனி நபர் அசனம் கொடுக்கும்போது வாடகையாக ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய் அசன மண்டப வாடகையாக செலுத்தவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.
2. ஆலய காணிக்கை பொருட்களை ஏலமிடப்பட்டு காணிக்கை பணத்தை எண்ணி கணக்கு முடித்து கொடுக்க கீழ்க்கண்ட கமிட்டி உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். 1. திரு. ஜோசப் டொமினிக்ராஜன்
   2. திரு. இருதயராஜ் 3. திரு. அமல்ராஜ் 4. திரு. அருள்ராஜ்
3. ஆலய வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள திருத்தலக் கடைக்கு இரண்டு பணியாளர்களை நியமித்து மேல் படியில் ஒரு ரூம் பங்கு அலுவலகமும், மற்றொரு ரூம் ஸ்டோர் ரூமாகவும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. கீழே உள்ள இரண்டு கடைகளையும் இணைத்து பழைய திருத்தலக்கடையை மாற்றி கீழ்க்கடையாக செயல்பட தீர்மானிக்கப்பட்டது.
4. கோயில் வளாகத்தில் இரண்டு போல் நாட்டி லைட் அமைத்துக் கொடுத்த திரு காமராஜ் குடும்பத்தாருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இன்னும் இரண்டு போல் நாட்டி லைட் போட ஒன்று திரு. காமராஜ் அவர்களும், மற்றொன்று திரு. சூசை செசன்ராஜ் அவர்களும் செய்து தர சம்மதித்துள்ளார்கள். இருவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

5.திரு எட்வின் காமராஜ் அவர்கள் பங்கு அலுவலகம் பிரமாண்ட கர்த்தர் குடில், திருவிழா டி.வி. விளம்பரங்கள், டிஜிட்டல் போர்டுகள் வெளியூர்களில் வைத்தது போன்ற செலவு விபரங்களை திருவிழா வரவு செலவு புத்தகத்தில் அல்லது மாத இதழ் புத்தகத்தில் வெளியிட முடிவு செய்யப்பட்டது.

6. ஆலய வளாகம் மற்றும் பள்ளிக்கூட வளாகம் ஆகியவற்றின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள டொன்போஸ்கோ சபை இளைஞர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவர்களுக்கு திரு. ஹெமலஸ், திரு.டொமினிக் மற்றும் திரு. வர்கீஸ் ஆகியோர் பொறுப்பாளர்களாக இருந்து செயல்பட முடிவு செய்யப்பட்டது.

7. கோவில் மேற்கூரை சம்மந்தமாக ஒரே ஒரு கொட்டேசன் மட்டும் லாரன்ஸ் வால்டர் அவர்கள் கொடுத்துள்ளார்கள். இந்த கொட்டேசன் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஊர் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

## ஊர் அசன பொதுக்கூட்டம்

### 9.3.2014

திருக்கல்யாண மாதா திருத்தல அசன ஊர்பொதுக்கூட்டம் பங்குத்தந்தையின் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. 9.3.2014 நிலவரப்படி அசனக்குழு இருப்பு ரூ. 162641.00
அசன நாள் – 22.03.2014
தீர்மானங்கள்
1.வரிபோடுதல் – வரி.. ரூ.500/-
அசன குழு தலைவர் திரு. ஜேம்ஸ், செயலர் திரு. சூசை செசன்ராஜ், பொருளாளர் திரு.சிங்கராயன், சிறப்பு உறுப்பினர்கள் திரு.மரிய அந்தோனி ஜார்ஜ், (பங்குப்பேரவை உபதலைவர்), திரு.எட்வின் காமராஜ் (பங்குப்பேரவை பொருளாளர்)
அசன பாத்திர பொறுப்பாளர்
திரு. அமலதாசன் அவர்கள் வாடகை பாத்திர வரவு செலவு கவனிக்கும் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார் ஊர்ப் பொதுஅசனம் முடிந்தவுடன் பங்குத் தந்தை வழியாக பழைய பொறுப்பாளர் திரு. சூசை செசன்ராஜ் அவர்கள் திரு. அமலதாசனிடம் பொறுப்பை ஒப்படைப்பார்.

அசன ஒளி- ஒலி
திரு. அந்தோனி பாஸ்கர் ரூ.12500/- (இன்ஜின், டீசல் உட்பட அனைத்தும்)
அசன ஒளி-ஒலிக்கு கொடுக்கப்பட்டது. (அடுத்த ஆண்டு அமலதாசனுக்கு வழங்கவேண்டுமென்றும் ஆண்டுதோறும் மாற்றி வழங்க தீர்மானிக்கப்பட்டது.)
திரு. பிரான்சிஸ் தேவராஜ் அவர்கள் உபதேசியாருக்கு உறுதுணையாக நியமிக்கப்பட்டு அவருக்கு மாத சம்பளம் ரூ.3000 வழங்க ஆலோசனை வழங்கப்பட்டது.

திருத்தல நிர்வாகத்தில் அமைக்கப்படும் அனைத்து பணிக்குழுக்களிலும் பங்குப்பேரவை தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இணைந்து செயல்படுவார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

**- பங்குத்தந்தை**




# நன்றிகள் பலகோடிகள்
# 01.03.2014 முதல்சனி
# உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| டெய்சி பாஸ்கர், பாளை | 1000.00 |
| R.அந்தோணிராஜ், பொற்பை | 500.00 |
| M.ஜோசப் கார்டர், சூசைமரியபிரபாகர், ஊத்தாங்கரை | 13000.00 |
| S.ரெஜினாள் மேரி, பொற்பை | 100.00 |
| சீனு, கன்னியாகுமரி | 500.00 |
| அனிஸ் வில்லியம்., கிருஷ்ணன்புதூர் | 2000.00 |
| D.ரோஸ் சேவியர், சென்னை | 3000.00 |
| ரோஸ்லீன், தூத்துக்குடி | 1000.00 |
| அமலதாசன், பொற்பை | 200.00 |
| மிக்கேலம்மாள், சிங்கம்பாறை | 200.00 |
| சிலுவை அந்தோணி, பொற்பை | 200.00 |
| G.ரெஜினாள் மேரி, பொற்பை | 500.00 |
| M.பரஞ்சோதி, பொற்பை | 500.00 |
| அஜீசா, துத்துக்குடி | 100.00 |
| ஜெயகிறிஸ்து, பொற்பை | 2000.00 |
| S.K.ராஜ். பொற்பை | 200.00 |
| S.அந்தோணி பாஸ்கர், பொற்பை | 500.00 |
| ராஜேந்திரன், பொற்பை | 100.00 |
| D.எட்வர்ட் லாரன்ஸ், பொற்பை | 300.00 |
| விசுவாசம் மிக்கேலம்மாள், கோவில்பட்டி | 500.00 |
| S.ஜார்ஜ், திருமூலநகர் | 1140.00 |
| ஜாண் பீற்றர், பொற்பை | 200.00 |
| அந்தோனி அடிமை, வள்ளிவிளை | 500.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா, மதுரை | 500.00 |
| அந்தோனி ஜெயராஜ், பொற்பை | 500.00 |
| மரிய மதலேனா, வள்ளம் | 200.00 |
| மரிய தாஸ் ரோஸ்லின், நெடுங்குளம் | 500.00 |
| ஜெரால்டு சூரியா, வாணியங்குடி | 500.00 |
| முத்து சசிகலா, பெங்களூர் | 500.00 |
| அந்தோனி ரோசாரி, ரா. மங்கலம்துறை | 1000.00 |
| A.ஸிபோரா | 2500.00 |
| ஜெரின் ஸ்டோர்ஸ் | 500.00 |
| அன்சியா, பாம்பன் | 50.00 |
| பெனிடிட், சார்தல்லா | 50.00 |
| ஆஷா, ராபின் முள்ளூர்துறை | 50.00 |
| பதுவை டிராவல்ஸ், மணவை | 500.00 |
| மரிய வின்செண்ட், ராமன்புதூர் | 1000.00 |

| | |
|---|---|
| **T.**ஜெயராஜ், நாசரேத் | 100.00 |
| **G.T.M.**அந்தோனி செல்வன், சாத்தான்குளம் | 1000.00 |
| ஷாஜி ஜேம்ஸ், மரியநாடு | 1000.00 |
| **S.**சுரேஷ் பாண்டியன், பொற்பை | 100.00 |
| மிக்கேலம்மாள், சின்னியம்மாள் | 250.00 |
| அலெக்ஸ், பொற்பை | 1000.00 |
| மைக்கிள், ராஜாவூர் | 500.00 |
| பிரான்சிஸ் ராயன், கூத்தனகுளி | 1000.00 |
| செல்வன், கன்னியாகுமரி | 2000.00 |
| ஜென்ஸி, அழகன்பாறை | 500.00 |
| டேவிட், ஜான் டிமோரிஸ், நாகர்கோவில் | 500.00 |
| சேவியர், சாத்தான்குளம் | 100.00 |
| **A.**பபி கால்ட்டன், கூத்தன்குளி | 5000.00 |
| ஏசுவடியான், பொற்பை | 100.00 |
| ஜெயராஜ் கீதா, பொற்பை | 100.00 |
| **P.**ஞானப்பிரகாசம், வாழையடி | 100.00 |
| அந்தோணிராஜ் ஷீலா, தலையன்கோட்டை | 100.00 |
| ஜெயசிங், தென்காசி | 100.00 |
| **I.**முகில் இன்பென்ட், மெஞ்ஞானபுரம் | 100.00 |
| ராயம்மா, சிங்கம்பாறை | 200.00 |
| கணபதி, வடக்கன்குளம் | 100.00 |
| லூக்காஸ் மளிகை, திருப்பூர் | 1000.00 |
| மொத்தம் | **51,540.00** |

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு. காமராஜ்-டெய்ஸிராணி, பொற்பை | 10000 சாப்பாடு பிளேட் |
| ஹாசன் பஸ் - காய்கறி ஏற்றி வந்த வாடகை | நன்கொடையாக |
| **J.A.**ரவிஸ்டர், பொற்பை | தக்காளி 12 பெட்டி |
| | பெ.வெங்காயம் 3மூடை |
| | உருளை 3 மூடை |
| | சேனை 10 கிலோ |
| | கேரட் 1 மூடை |
| | மிளகாய் 1 மூடை |
| | பீன்ஸ் 1 மூடை |
| பெயர்சொல்ல விரும்பாத நபர் | அரிசி 3 மூடை |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 1 மூடை |
| **M.S.R.**ஜஸ்டின், சென்னை | அரிசி 1 மூடை |
| **S.**ஜெரோம் குயிண்டின், கவரப்பேட்டை | அரிசி 1 மூடை |
| ராஜேஷ் அமலா, பொற்பை | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டுவிஜி, மும்பை | அரிசி 50 கிலோ |
| சூசை மிக்கேல், கோவை | அரிசி 50 கிலோ |
| ரூபி ஸ்டோர், பொற்பை | அரிசி 50 கிலோ |

| | |
|---|---|
| T.ரிச்சட்ஸன், ராபின்சன், பொற்பை | அரிசி 1 மூடை |
| லாரன்ஸ், கோவளம் | அரிசி 25 கிலோ |
| லிபரி போஸ், உவரி | அரிசி 25 கிலோ |
| அல்போன்ஸ், பலராமபுரம் | அரிசி 50 கிலோ |

## முதற்சனி மதிய உணவு செலவு விபரம் : (01.03.2014)

| | |
|---|---|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| யோவான் சமையல் குழு | 13000.00 |
| சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 3450.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 100 | 5700.00 |
| பாஸ்கர் மளிகை | 52026.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் 8 நடை | 2000.00 |
| வின்செண்ட் உணவு விடுதி | 1555.00 |
| இம்மான் தண்ணீர் லோடு வண்டி வாடகை | 1750.00 |
| தேவ அமிர்தராணி செங்கல் 50 | 275.00 |
| அந்தோணிராஜ் விறகு உடைக்க | 500.00 |
| மொத்தம் | 83156.00 |

## முதற்சனி மதிய உணவு வரவு -செலவு விபரம்

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 40857.00 |
| கையில் | 432.00 |
| நன்கொடை மூலம் வரவு | 51540.00 |
| ஜோஸ் குடும்பத்தினர் வங்கியில் | 3000.00 |
| மொத்தம் | 95829.00 |
| செலவுகள் | 83156.00 |
| இறுதி இருப்பு | 12673.00 |

| | |
|---|---|
| வங்கியில் | 12540.00 |
| கையில் | 133.00 |
| இறுதி மொத்த இருப்பு | 12673.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 30.01.14 அன்று இருப்பு | 347531.00 |
| 01.02.14 முதல் 28.02.14 வரை விற்பனை | 151680.00 |
| மொத்தம் | 499211.00 |
| 01.02.14 முதல் 28.02.14 வரை செலவு (பொருட்கள் + சம்பளம்) | 151845.00 |
| 28.02.14 அன்று இருப்பு | 347366. 0 0 |

– திருத்தலக்கடை நிர்வாகிகள்

# முதல் சனி வழிபாடு
# 01.03.2014



திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் மார்ச் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 1.3.2014 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**பாஸ்கர்** அடிகளார் குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை மலையாளத்திலும் அருட்திரு.**ஆரோக்கியராஜ்** அடிகளார் தமிழிலும் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. சப்பரப் பவனியின்போது மலையாளத்திலும், தமிழிலும் பாடல்கள் பாடப்பட்டது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு.**அந்தோனிசாமி** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு. **பீட்டர் ராஜா** அருட்திரு. **பங்கராஸ்,** அருட்திரு.**ரெத்தினராஜ்** அருட்திரு.**ஜான்போஸ்கோ** அருட்திரு.**பிரிட்டோ,** அருட்திரு. **A.S.ராஜா,** **அருட்திரு. கிராசியூஸ்,** அருட்திரு.**டென்சில்ராஜா,**அருட்திரு. **அருள்மணி** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பர்னபாஸ்** அடிகளார் தமிழிலும், அருட்திரு.**பாஸ்கர்** அடிகளார் மலையாளத்திலும் மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **200** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **10500** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கல் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதை அருட்திரு. **டென்சில்ராஜா** அடிகளார் வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** அவர்கள் தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து மாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– பங்குத்தந்தை**

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330**

**01-03-2014 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 2147 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 2058 பேர் |
| சுகப்பிரசவம் | - | 1897 பேர் |
| நற்சுகம்பெற | - | 2143 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 1324 பேர் |
| தேவஅழைத்தல் | - | 1032 பேர் |
| வேலைகிடைக்க | - | 2213 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1418 பேர் |
| குடும்பசமாதானம் | - | 1875 பேர் |
| குடும்பநலன் | - | 1007 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 1214 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1976 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 1895 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1786 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 1574 பேர் |
| மனமாற்றமடைய | - | 1635 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 2106 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 1702 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 1494 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 2501 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 1618 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.** **- பங்குத்தந்தை**

**உங்கள் ஜெபஉதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

## புனித வின்சென்ட் தே பவுலின் அன்புரைகள்



1. தன் வாழ்நாளில் ஏழையை நேசிப்பவன் மரண நேரத்தை அச்சமின்றி எதிர்கொள்வான்.
2. ஏழைகளுக்காக வாழ்ந்து இறப்பதைவிட மேலான இன்பத்தை நாம் பெறமுடியாயது.
3. தாழ்ச்சியே ஆன்மீக வாழ்க்கையின் அரிச்சுவடியாகும்.
4. நாம் இறைவனிடம் உதவி கேட்டு வேண்டுவதற்கு செலவழித்த கால அளவை அவருக்கு நன்றி செலுத்தவும் செலவழிக்க வேண்டும்.
5. கடவுளின் செயல்கள் சிறிது சிறிதாகவே நிறைவேறும்.



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின்

## அற்புதங்கள்...

## சாட்சிகள்...

1. திருமணம் நடந்தமைக்கு நன்றி. – ஜினி ஆல்பின், மைலோடு
2. நியூஸிலாந்தில் வேலை கிடைத்தமைக்கு நன்றி. – லிசிஆண்ட்ரூ, திருவனந்தபுரம்.
3. பெண்குழந்தை கிடைத்தமைக்கு நன்றி. – அலெக்ஸ்குஞ்சுமேரி, பொழியூர்
4. குடிப்பழக்கம் மாறியதற்கு நன்றி. – சுரேஷ், கிள்ளியூர்
5. நல்ல தொழில் வளர்ச்சிக்கு நன்றி. – எப்பத்தா போட், குளச்சல்
6. வேலை கிடைத்தமைக்கு நன்றி. – சுனில்நெட்டோ, பொழியூர்
7. கடன் தொல்லை தீர்ந்தமைக்கு நன்றி. –செல்வமணி, தொலையாவட்டம்
8. மயக்கத்திலிருந்து நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி. – ரோஸ்மேரி, வேங்கோடு.
9. வெளிநாட்டு வேலைக்கு நன்றி. – பினுராஜ் செல்வி,மாத்திரவிளை
10. மனக்கவலைகள் மாறியதற்கு நன்றி. –பெர்க்கமான்ஸ், புதுக்கடை
11. குடும்ப சமாதனத்திற்கு அன்னைக்கு நன்றி. – சுபினி, பாறசாலை
12. திருமணம் நடந்தமைக்கு நன்றி. – கருணாகரன், சுடர்தீபா, இராஜாவூர்
13. நல்ல இல்லம் அமைந்ததற்கு நன்றி. – இனிதா, மாங்கரை
14. வெளிநாடு சென்றமைக்கு நன்றி. – ரீகன், கண்டன்விளை
15. அறுவைச்சிகிச்சை வெற்றி பெற்றமைக்குநன்றி. –லதீஷா, நீரோடி
16. சுகப்பிரசவம் கிடைத்தமைக்கு நன்றி. – சுகுணா, மணலிகரை
17. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி. ரூஸ்வல்ட் தீபா, கூத்தன்குழி
18. திருமணம் நடந்தமைக்கு நன்றி. – சூசைமரிய பிரபாகர், ஊத்தாங்கரை
19. கணவரோடு சேர்த்து வாழ வரம் தந்த அன்னைக்கு நன்றி. – லேனா, மரியநாடு.
20. அரசு ஆசிரியர் பணி கிடைத்தமைக்கு நன்றி. – யாழினி, கோவளம்
21. காணாமல் போன போட் கிடைத்தமைக்கு நன்றி. பெரியநாயகிபோட், தூத்துக்குடி
22. அறுவை சிகிச்சையின்றி கட்டி கரைந்தமைக்கு நன்றி. – ரெமிபாய், கு.பந்திவிளை
23. ஊதிய உயர்வு கிடைத்தமைக்கு நன்றி. – பொற்கொடி, தோவாளை.
24. அப்பெண்டிக்ஸிலிருந்து சுகமானதற்கு நன்றி. – நயநான்கௌஸி, மரியாநடு
25. திருமணம் நடைபெற்றதற்கு நன்றி, – சகாயராஜ்
26. தேர்வில் வெற்றி பெற்றதற்கு நன்றி. –லாரன்ஸ், லதா, மார்த்தாண்டம்
27. வெளிநாடு சென்றதற்கு நன்றி. – டோமினிக் சாவியோ, கள்ளிகுளம்
28. அறுவை சிகிச்சையில் சுகம் பெற்றதற்கு நன்றி. – ஜெரின், முள்ளூர்துறை
29. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி, – ஜெய்சன், சுவீற்றா, குளச்சல்
30. திருமண காரியம் நடந்தமைக்கு நன்றி. – ஹேமா மேரி, முட்டம்.
31. புதிய இல்லம் கிடைத்தமைக்கு நன்றி. –ஜோசப், ராஜாக்கமங்கலதுறை
32. வேலை கிடைத்தமைக்கு நன்றி, – தியாகு, பொழிக்கரை.
33. எட்டு வருடங்களுக்குப் பிறகு குழந்தை பாக்கியம் கிடைத்ததற்கு அன்னைக்கு நன்றி – பிரபு ஜெயா, நொச்சிக்குளம்

- பங்குத்தந்தை

# அம்மா உன் பெருமையில்!




இது தன்னாலே வந்த இறைகூட்டமாம்
கல்யாணத் தாயின் புகழ்பாட வந்த திருக் கூட்டமாம்
பொற்பை வாழ் கல்யாணத்தாயே
மண் தந்த மாணிக்கம் நீயே!
மானிடத்தின் மகிமைத் தாயே
மங்கையர் குலப் பெருமை நீயே!



இயற்கை எழில் கொஞ்சும்
பொற்பை நகர் தன்னிலே
பொன் மாட ரத வீதியினிலே
பொங்கும் மக்கள் வெள்ளத்திலே
யாரு வாரா தேரிலே
மாதா வாரா தேரிலே – என
மங்கல வாழ்த்தொலி எழ
நீந்தி வரும் சிங்காரத் தேரினிலே
நித்திய சுமங்கலியாய் பவனி வந்த
திருக்கல்யாணத் தாய் மரியே – நின்
அருளினை பொழிந்த போதினிலே
வியப்பூட்டும் குணப்படுத்தல்கள்
விடியலுக்கான வழிகாட்டுதல்கள்
விசித்திரமான மனமாற்றங்கள்
வாழ்வில் விறுவிறுப்பான ஏற்றங்கள்
விந்தைமிகு அற்புதங்கள் தான்
எத்தனை எத்தனை அம்மா!
எத்தனை தீபங்கள் ஏற்றினாலும்
என்றும் குறையாதது அம்மா உன் அருளொளி!
எத்தனை தலைமுறைகள் தோன்றினாலும்
என்றும் நிலையானது அம்மா உன் அன்பு
எவ்வளவு தான் ஏற்றிப் புகழந்தாலும் – அது
எள்ளளவே அம்மா உன் பெருமையில்!

– **ம. மிக்கேல் உஷா,** பொற்பை.

## அருளாளர் ஃபிரடரிக் ஓசானாவின் பொன்மொழிகள்



★ மனஅமைதி இல்லாமல் எந்த நன்மையும் நம்மை மகிழ்ச்சிபடுத்த இயலாது. மனஅமைதியிருந்தால் மரணம் உட்பட எந்த சோதனையையும் தாங்கிக்கொள்ளலாம்.

★ வரலாறு காலவரையறை கொண்டது. விவிலியமோ நித்தியமானது.

★ மனசாட்சியின்றி மனிதர்கள் பண்படுவதில்லை. உணர்ச்சிகளை வெல்லுவதே முதல் வெற்றியாகும்.

# நற்கருணையே திருச்சபை

**முன்னுரை :**

திருச்சபை வாழ்வின் நடுநாயகமும் உச்சநிலையும் நற்கருணை தான். ஏனெனில் நற்கருணைக் குள் கிறிஸ்து தம் திருச் சபையையும், தம் எல்லா உறுப்பினரையும் ஈடுபடுத்தி தம் பாவப் பரிகார புகழ்ச்சிக் கான நன்றி பலியை தம் தந்தைக்குச் சிலுவை யில் ஒரே முறையில் ஒப்புகொடுத்தார். இப்பலியினால் அவர் மீட்பின் அருள் வரங் களை தம் உடலாம் திருச்சபையின் மீது பொழிகின்றார்.



**அடியோர் வாழ்ந்நிட :**

அன்பின் தேவநற்கருணையிலே அழியாப் புகழோடு வாழ்பவரே அன்புப் பாதையில் வழிநடந்தே. அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர். நற்கருணை கிறிஸ்துவ வாழ்க்கையின் மையமாகவும் நலம் தரும் மருந்தாகவும் அன்பின் சின்னமாகவும் பாவம் போக்கும் அருமருந்தாகவும் உறவில் மலரும் இறையாட்சி மையமாகவும் விளங்குகிறது. ஏசு கடைசி இராஉணவின்போது

இதை என் நினைவாக செய்யுங்கள் எனப் பணித்தார். உணவாக இருக்கவேண்டும் என விரும்பினார். உங்கள் முன்னோர் மன்னாவை உண்டார்கள் ஆயினும் இறந்தார்கள். வானின்று இறங்கி வந்த உணவை உண்பவர்களோ என்றுமே இறக்கமாட்டார்கள். நானே வானின்று இறங்கிவந்த உயிருள்ள உணவு. ( அருளப்பர் 6: 49,50 ) என்கிறார் இயேசு. அடியோராகிய திருச்சபையின் அங்கத்தினர் வாழ்ந்திட உயிருள்ள உணவு நற்கருணையே.

**உறவை வலுப்பருத்துவது நற்கருணையே :**

நற்கருணைபந்தியில் அனைவரும் சமமானவரே. ஒரே உள்ளம், ஒரே மனம் கொண்டவர்களாக வாழ வழிசெய்வது நற்கருணை திருவிருந்து. தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு எவனிடமுமில்லை.( அருளப்பர் 15:13 ) என்றவர் தன்னையே தந்த நிகழ்ச்சிதான் திருவிருந்து. உணவு உடலில் இரண்டரக் கலந்து இரத்தமாவது போல நற்கருணை பந்தியில் அமர்ந்த ஒவ்வொருவரும் இனி வாழ்வது நானல்ல என்னில் வாழ்பவர் கிறிஸ்துவே (கலா 2 : 20) எனச் சொல்லும் அளவுக்கு உறவை வலுப்படுத்துவது நற்கருணையே

**அருட்சாதனங்களிலெல்லாம் உன்னதமானது**

திருவருட்சாதனங்களிலெல்லாம் மிகவும் உன்னதமானது நற்கருணையே. ( திருச்சபை சட்டம் எண் 897 ) நற்கருணை வழிபாடுதான் இயேசுவால் ஏற்படுத்தப்பட்டு திருச்சபையில் ஒப்படைக்கப்பட்ட ஒரே வழிபாடு. எனவே நற்கருணை இல்லையென்றால் திருச்சபை இல்லை. திருவருட்சாதனங்கள் நற்கருணையை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. கிறிஸ்தவ வாழ்வின் ஊற்றும் சிகரமுமே என்கிறது 2ம் வத்திகான் சங்கம். ( தி.11 ) திருச்சபை நற்கருணையால் வாழ்கிறது. வளர்ச்சியும் பெறுகிறது.

**வல்லமைதரும் நற்கருணை :**

புனித பிரான்ஸிஸ் தனது வாழ்க்கையை பற்றி தெரிந்துகொள்ள சிறிய கோவிலில் அமர்ந்து இறைவா பேசும்; உன் அடியான் கேட்கிறேன் என்று உருக்கமாக ஜெபித்தார். அப்போது அந்த திருச்சிலுவையில் இருந்து இப்போதே எழுந்து செல் பிரான்ஸிஸ்; இடிந்துவிழப்போகும் என் வீட்டை கட்டுவாயாக என்ற குரலொலி எழும்பியது. என்னுடைய வீடு என்று இயேசு அந்த சிறிய ஆலயத்தை மட்டும் கூறவில்லை. மாறாக தன்னுடைய அகில உலக திருச்சபையையே குறிப்பிட்டார். எனவே திருச்சபையை கட்டுகிற பிணைக்கிற வல்லமை நந்கருணையில்தான் உள்ளது.

**அணையாவிளக்கு நற்கருணை :**

எல்லா விளக்கும் அணையவேண்டியதே. அவை இருந்த காலத்தில் எத்தனைபேருக்கு வழிகாட்டியானது என்பதே முக்கியம் மண்ணில் உதித்த மன்னவன் மரித்து உயிர்த்தாலும் என்றும் வாழும் இறைவனாக இன்றும் நம்மோடு இருப்பார். நற்கருணை வழியில்தான் பலர் மரித்தும் வாழ்கிறார்கள் பலர் மரித்தே வாழ்கிறார்கள். மரித்தும் வாழ்வோருக்கு இலக்கணம்.

**நிறைவாக ;**

என்றும் வாழ்ந்திட (யோவான் 6 : 56) நற்கருணையே உணவு. திருச்சபை என்றும் நிலைத்திட நற்கருணையே உணவு. அடிமை செய்யும் ஒவ்வோர் அமைப்பினின்றும் மனித சமுதாயத்தை விடுவிப்பது திருச்சபையின் கடமையும் நற்செய்திப் பணியுமாகும் என உரோமையில் 1917 ல் கூடிய உலக ஆயர் பேரவையில் பேசப்பட்ட கருத்து. திருவிருந்தில் நிறைவேறுகிறது.

கல்விப்பணி, அறப்பணி, மறைபரப்பு பணி, மருத்துவப்பணி, நிவாரணப்பணி, விழிப்புணர்வுபணி, திருமறைப்பணி போன்ற பணிகள்மூலம் ஏழை எளியோர் நலிவுற்றோர், விதவைகள், பெண்கள், குழந்தைகள் ஆகியோருக்கு பலவழிகளிலும் உதவி செய்யும் திருச்சபை வாழ்வதும் வளர்வதும் நற்கருணையால்தான். நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் இறைவன் விசுவாசத்தின் மறைபொருளை விளக்கிட வார்த்தைகள் இல்லை.

**-சகோ. லிப்டன் ராஜதுரை,** அழகப்பபுரம்




இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர் (லூக்கா 1:48) இத்தகைய பேறுதான் மரியா துதிக்கப்படத் தகுதியானவர் என்பதைக் குறித்துக்காட்டும் சான்று. திருச்சபையானது மரியாவுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல பக்தி முறைகளையும், சிறப்பு வணக்கங்களையும் முன்னெடுத்து மக்களுக்கு கற்பித்திருக்கிறது. தொடக்க காலத்திலிருந்தே மரியா இறைவனின் தாய் என்னும் கோட்பாட்டைப் பிரகடனப்படுத்தி, அதைப் பல சான்றுகளோடும், விளக்கங்களோடும் ஊர்ஜிதப்படுத்தி வருகிறது. (CCC. 971). மரியாவின் உண்மையான புனிதமிக்க தாய்மையைப்பற்றிய கோட்பாடு கிறிஸ்தவக் கோட்பாடு என நெஸ்டோரியசுக்கு எதிராக எஃபேகஸ் திருச்சங்கம் (431) தனது கருத்தை வலியுறுத்தியது. 2ஆம் அருள் சின்னப்பர் தனது சுற்றுமடலின் வழியாக, மரியா இறைவனின் தாய் என்னும் மறை உண்மையை அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். அவ்வாறு, மரியா இறைவனுக்கே தாய் எனும்போது, நமக்கும் தாயாகிறார் என்பதில் எந்தவித மாற்றுக்கருத்துமில்லை.

இத்தகைய பெருஞ்சிறப்பினைப் பெற்றிருக்கும் மரியா, அவரது பிள்ளைகளாகிய நம் அனைவராலும் போற்றப்பட, புகழப்பட நிறைந்த தகுதியுடையவராயிருக்கிறார். இருப்பினும், கத்தோலிக்க திருச்சபை வழிபாட்டில், தந்தையாகிய இறைவனுக்கும், மகனாகிய இயேசுவுக்கும் தூயவராகிய ஆவியானவருக்கும் செலுத்தக்கூடிய ஆராதனையோடு, மரியாவுக்கு அளிக்கக்கூடிய வணக்கத்தை ஒப்பிட முடியாது. ஏனெனில் உலகத்தை உருவாக்கிய மூவொரு இறைவன்தான் மரியாவையும் உருவாக்கினார். அன்னை மரியா படைப்புகளில் மிகச் சிறந்த உயர்ந்த படைப்பாதலால், அவருக்கென்று உரிய வழிபாடுதான் அளிக்கப்பட வேண்டுமே தவிர, ஆண்டவருக்கென்று உள்ள அந்தஸ்தை அன்னைக்கு அளிப்பது தவிர்க்கப்பட வேண்டும். இருப்பினும், மரியாவுக்குரிய வணக்கத்தை வளர்ப்பதில், திருச்சபை மிகுந்த சிரத்தை எடுத்து வருகிறது. (2ம் வத்திக்கான் திருச்சங்கம் LG.66). நம் மீது மரியா கொண்ட அன்பின் வெளிப்பாடு இரு பெரும் செயல்பாடுகளைக் கொண்டிருக்கிறது.

ஆழியின் ஆழம், அகலம் கூட கண்டறியப்பட முடியும். ஆனால் அன்னையின் அருள்வெள்ளம் அளவிட முடியாதது. தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்க, தான் கொண்ட இறையருளையும் உயர் ஆசீர்களையும் உலகிற்கு மழையெனப் பொழிந்து அவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி, ஒருநிமிடம் மலைத்து நிற்கச் செய்யும் அன்னை மரியா எந்நாளும் போற்றப்பட, புகழப்பட, வாழ்த்தப்பட, வணங்கப்பட தகுதியானவரே! வானரசியான அன்னை மரியா பக்தி நாளுக்கு நாள் வளர்பிறையாகட்டும். கடவுளின் தாயான மரியாவின் புகழ் கடல் கடந்து பரவி பலரது கண்ணீரைத் துடைத்திடட்டும். கன்னித் தாயான அன்னை மரியாவின் பெயர் காலம் கடந்து சிறந்திடட்டும். அப்பொழுது அன்னை வழியாக இறைவன் மாட்சி பெறுவார் நாமும் மீட்பு பெறுவோம்.

நன்றி : **தாயே எங்கள் தஞ்சமே**

# கல்யாணத் தாயின் நாமம்

இயேசுவின் வல்லமை மிக்க நாமம் தான் நம் கல்யாணத் தாயின் திருநாமம் ஆகும். இயேசுவுக்கு பின் அவருடைய சீடர்கள் அனைவரும் இயேசுவின் நாமத்தினால் புனித பேதுரு அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்தார் என்பதை தி.பணி. 3:6 மற்றும் 10:44ல் காண முடிகிறது. அதே போன்று பவுல் அடிகளார் தி.பணி 16:18 மற்றும் 19:6ல் செய்த அற்புதங்களைக் காணமுடிகிறது. அப்பேர்ப்பட்ட இயேசுவின் வல்லமை மிக்க நாமத்தைக் கொண்டுதான் நம் திருக்கல்யாணத் தாயும் இன்றும் அநேக அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்து வருகிறார். அந்த அன்புத்தாய் கல்யாணத்தாயின் பிள்ளைகள் என மார்தட்டிக்கொள்ளும் நாமும் இயேசுவின் நாமத்தைக்கொண்டு நல்ல உண்மை கிறிஸ்தவர்களாக வாழ்கிறோமா? சிந்திக்கவேண்டும். அதற்கு முதலாவதாக நாம் அன்னையைப் போன்று தாழ்ச்சியோடும் பிறரன்பு கொண்டும் வாழவேண்டும். நம்மிடமிருக்கும் அகந்தை, செருக்கு, கோபம் போன்ற தீய குணங்களை விட்டுவிடவேண்டும். தி.ப. 10:34ல் கடவுள் ஆள் பார்த்து செயல்படுவதில்லை என பேதுரு கூறுகிறார். ஏழை. பணக்காரன், கருப்பன், சிவப்பன், படித்தவன் - படிக்காதவன், உயர்ந்தவன் - தாழ்ந்தவன் என்ற பாகுபாடு பார்ப்பதில்லை. அவர் முகத்தைவிட அகத்தை ஆராய்ந்தறிபவர். இதையே நம் கல்யாணத்தாயும் லூக். 1:52ல் உள்ளத்தில் செருக்குற்றோரை சிதறடிக்கிறார் என தம் பாடலில் பாடியுள்ளார். ஆதலால் நாமும் அன்னையைப் போன்று தாழ்ச்சியோடும், பிறரன்பு கொண்டும் இறைவிசுவாசத்தோடும் வாழவேண்டும். இப்பேர்பட்ட அர்ப்பண வாழ்வுதான் கிறிஸ்தவ வாழ்வு. நாமும் மீட்பு பெற்று உண்மை கிறிஸ்துவர்களாக வாழும்போது நாமும் இயேசுவின் நாமத்தினால் வரும் ஆசீர்வாதங்களை அன்னை வழியாகப் பெறமுடியும்.



இப்பேர்பட்ட ஆசீர்வாதங்களைப் பெற்று ஜெபிப்பவர்களால்தான் அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்ய முடியும். இறைவன் நம்மை ஆட்சி செய்கிறார். ஆனால் ஜெபிக்கின்ற மனிதன் இறைவனையே ஆட்சி செய்கின்றான். ஒரு முறை ஒரு இல்லத்திற்கு ஜெபிக்கச் சென்ற போது இங்கே வராதீர்கள், எனக்கு நம்பிக்கையில்லை என சொல்கிறான் இல்லத் தலைவன். ஆனால் ஜெபிக்கவந்தவர்கள் விட்ட பாடில்லை. வந்ததும் வந்துவிட்டோம். 2 நிமிடம் ஜெபித்துவிட்டு செல்கிறோம் எனச் சொல்கிறார்கள். தொந்தரவின் பொருட்டு வேண்டாவெறுப்பாக அதோ அந்த பலா மரத்துக்கடியில் நின்று ஜெபித்துவிட்டு செல்லுங்கள் எனச் சொல்கிறான் குடும்பத்தலைவன். ஆறுவருடம் வரை காய்க்காத பலா மீண்டும் காய்க்காது என்பார்கள். ஆனால் 12 வருடங்களாக காய்க்காத பலா மரத்தின் அடியில் நின்று அந்த ஜெபிக்கும் மனிதர் இருவரும் இயேசுவின் நாமத்தைக் கொண்டு ஜெபித்துவிட்டு சென்றார்கள். 4 மாதம் கழித்து ஜெபத்தை

விரும்பாத இல்லத் தலைவன் அவ்விரு ஜெபிக்கும் மனிதர்கள் காலடியில் விழுந்து வணங்குகிறான். ஏனெனில் 12 வருடங்களாக காய்க்காத மரம், எந்த ஒரு பலாவும் காய்க்காத அளவுக்கு, கொத்து கொத்தாக காய்த்தது. வல்லமையுள்ள இயேசுவின் நாமத்தை உணர்ந்த மனிதன் கடவுளுக்கு பயந்து ஒரு உண்மை கிறிஸ்தவனாக, ஜெப வீரனாக வாழ்கின்றான்.

இப்பேர்பட்ட நம்பிக்கை கொண்டவர்கள் மாற்கு16:17–18ல் நமக்குச் சொல்வதுபோல இயேசுவின் நாமத்தினால் பேய்களை ஓட்டுவர், புதிய மொழிகளை பேசுவர், பாம்புகளைக் கையில் பிடிப்பர், நஞ்சைக் குடித்தாலும் தீங்கிழைக்காது நோயுற்றவர் மேல் கைகளை வைக்கும்போது அவர்கள் குணமடைவார்கள். ஆதலால் இயேசுவின் நாமத்தைக் கொண்டு அதிசயங்களையும் அற்புதங்களையும் செய்துவரும் வல்லமை மிக்க கல்யாணத்தாயின் நாமம் நமது வாழ்வுக்கு வழியாக அமைய ஜெபிப்போம். – **Y.V.ராஜ்,** சென்னை.

# புனித சூசையப்பர்



“புனித கன்னிமரியாளின் தூய பத்தாவும், இயேசுவை வளர்த்த தந்தையுமான சூசையப்பர், தாவீது அரசரின் குலத்தைச் சேர்ந்தவர் இவர் நீதிமான், தூய உள்ளம் உள்ளவர் கற்பை நேசித்தவர். தாழ்ச்சி, பொறுமை திடம் இவற்றை சிறந்த விதமாகக் கெண்டிருந்தார். ஏழையாக மறைந்த வாழ்வு நடத்தினார். எனினும் கடவுள் முன் இவர் செல்வந்தர். பூமியில் நித்திய பிதாவின் பிரதிநிதி. திருக்குடும்பத்தின் தலைவர் திருக்குடும்பமே கடவுளது பெரிய குடும்பமான திருச்சபையின் தொடக்கம். கடவுள் இருபெரும் திரவியமாக தம் மகனையும் அவருடைய மாதாவையும் இவரிடம் ஒப்படைத்தார். எனவே திருச்சபையும் இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இவர் நல்ல மரணத்தின் பாதுகாவலர். பல தரத்தினரான மக்கள் நம்பிக்கையுடன் இவரது உதவியைத் தேடுகிறார்கள். நல்ல மரணம் அடைய இவரது உதவியைத் தேடுகிறவர்கள் பாக்கியமாக இறக்கிறார்கள். இவரிடம் கேட்டதை அடையாமல் போனதில்லை” என்று புனித அவிலாதெரசம்மாள் கூறுகிறார்.

–**ம.யூஜிதா செல்வசூர்யா**, பொற்பை

# திருத்தந்தையின் பொன்மொழிகள்...



முன்னாள் திருத்தந்தையுடன் இந்நாள் திருத்தந்தை

★ இறைவன் ஒவ்வொருவரையும் மன்னிக்காவிடில் இவ்வுலகம் இருக்காது; இயங்காது

★ பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே உள்ள பிளவு, ஒரு பெரிய சமுதாயப் பாவம். அது கடவுளை நோக்கி கூக்குரலிடுகிறது.

★ நாம் ஏழைகளுக்கும், பலவீனர்களுக்கும், முகவரி இல்லாதவர்களுக்கும் பணிபுரிய வேண்டும்.

★ இருள் சூழ்ந்த இன்றைய உலகிற்கு நாம் நம்பிக்கையின் ஒளியாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்கு நம்பிக்கை ஊட்டும் மனிதர்களாக இருக்க வேண்டும்.

– **டே. கீர்த்திகா,** வெள்ளக்கோவில்

# பிப்ரவரி 2014 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** முன்னிருப்பு | | |
| வங்கியில் ரூ. 617264.00 | | |
| கையில் ரூ.1016.00 | 618280.00 | |
| திருப்பலி 196X70 (முதற்சனி 156 அலுவலகம் 40) | 13720.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 5890.00 | | |
| முதலூர் - 830.00 | 6720.00 | |
| இதர நன்கொடைகள் | 12810.00 | |
| காலண்டர், பாமாலை, வரலாறு புத்தகம் | 1785.00 | |
| ஆலய வீடு வாடகை | 500.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 214230.00 | |
| அடுப்புக்கரி விற்றது | 600.00 | |
| திருமண அறிக்கை | 300.00 | |
| பள்ளிகள் மூலம் | 6056.00 | |
| மண்டப நன்கொடை | 3000.00 | |
| உபதேசியார் மூலம் | 20190.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 5630.00 | |
| பழைய மெழுகு விற்பனை | 6300.00 | |
| பைன் மூலம் வரவு | 500.00 | |
| மொத்தம் | 910621.00 | |
| **செலவுகள் :** | | |
| மேல்மாடி கழிப்பிடம் அமைக்க கூலி | | 13000.00 |
| முதல்சனி குருக்கள் படி | | 9300.00 |
| முதல் சனி விளம்பரம் எலிசபெத், கிரிஜா | | 1000.00 |
| பங்குப்பேரவை கூட்டம் டீ செலவு | | 540.00 |
| மின்கட்டணம் | | 50410.00 |
| மேக் டி.வி விளம்பரம் | | 4000.00 |
| செல்வன் கூலி முன்பணம் | | 10000.00 |
| டி.வி. சரி செய்ய | | 250.00 |
| வடக்கு ஆர்ச் வேலை கூலி | | 1580.00 |
| பள்ளி மீட்டர் சரிசெய்து மாற்ற | | 1880.00 |
| கோயில் மெயின்போர்டு சரிசெய்ய | | 932.00 |
| ஜேசுதாஸ் கூலி | | 2900.00 |
| முதல் சனி உணவு வகைக்கு | | 30000.00 |
| பள்ளி செப்டிக் டேங்க் கட்ட முன்பணம் | | 30000.00 |
| எரிவாயு | | 450.00 |